ஓம் ஆறுமுக அரங்கமகா தேசிகாய நம

**7. ஓங்காரக்குடிலின் அனைத்து அறப்பணிகளை தொடர்ந்து தடையில்லாமல் செய்வதற்கான பொருளுதவி தடையில்லாமல் வருவதற்கு ஆசி அறிவுரை வேண்டுகிறோம்.**

**ஓங்காரக்குடிலாசான் தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிகர் அருட்சுவடி**

**23.05.2024**

1. மாதவ ராஜனாய் இந்த கலியுகத்தில்
மக்களுக்கு குருவாக நின்று அருள் புரிந்த
மேதகு ஆறுமுக அரங்கன் யானும்
முருகப்பெருமானோடு இன்று ஜோதியில் கலந்து

2. கலந்துமே அன்பர்களுக்கு இன்னும் சூட்சும குருவாக
ஆற்றல்பட அருட்சுவடி வழி பேசி வர
மாற்றமுற ஓங்காரக்குடிலின் அனைத்து அறப்பணிகளுக்கும்
மண்ணுலகில் தடையற பொருளுதவி கிட்ட உண்டான

3. வேண்டுதலாக அன்பர்கள் வைக்க
தடையற என் சேவையும் நோக்கமும்
தர்மப் பணிகளும் அன்னதானமோடு கூடிய
ஓங்காரக்குடிலின் தொடர்பு கொண்டுள்ள அனைத்து

4. அறப்பணிகளும் எந்த சூழ்நிலையிலும்
பங்கமின்றி தடையின்றி பொருளாதார அளவில்
பின்னடைவின்றி இனிதே உயர்வுபட நடந்தேற
அரங்கன் என் ஆசி பரிபூரணமாய் உண்டு

5. இன்பமுற குடிலுக்கு தொடர்புள்ள
இன்னும் உயர்வான மக்களை
எல்லாத் திக்கிலும் இருந்து
அரங்கன் யான் வரவழைப்பு செய்து

6. இன்பமுற ஓங்காரக்குடிலின் அறப்பணிகள்
சிறப்போடு பொருளாதாரக் குறைவின்றி
நடந்தேற பரிபூரண ஆசி
ஆசி தந்தேன் அன்னதானத்திற்கும் அறப்பணிக்கும்

7. அன்பர்கட்கு உண்டான தேவைகட்கும்
ஓங்காரக்குடிலின் நிர்வாகத்திற்கு உண்டான

அன்பர்களுக்கு வழங்கும் செலவு தொகைகள்
குடிலின் பராமரிப்பு என அனைத்து காரியங்களுக்கும்

8. பழுதின்றி தாராள தனபுழக்கம்
பொருள் வளம் கூடி இனிதே பாதுகாப்பாய் இயங்க
தவராஜன் என் பரிபூரண ஆசியும்
அனுமதியும் உண்டு உண்டு ஆசி விளக்கம் முற்றே.

–சுபம்–